**அனுப்புநர்**

திருமதி.க.சசிகலா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை - 600 006.

**பெறுநர்**

1. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
2. முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டங்கள்.

**ந.க.எண். 005472/எச்.1/2026** **நாள் :14.05.2026**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள் :** சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - மேல்நிலை துணைத் தேர்வு, ஜூன்/ஜூலை 2026 – பள்ளி மாணவர்கள் பள்ளிகள் மூலமும் / தனித்தேர்வர்கள் சேவை மையங்கள் (Service Centres) மூலமும் ஆன்-லைனில் விண்ணப்பித்தல் – பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்கக் கோருதல் – தொடர்பாக.

**பார்வை :** 1. அரசாணை (நிலை) எண்.63, பள்ளிக் கல்வித் (அ.தே.) துறை, நாள்.04.03.2024
2. இவ்வலுவலக செய்திக் குறிப்பு நாள்.14.05.2026.

******

நடைபெறவிருக்கும் ஜூன்/ஜூலை 2026, மேல்நிலைத் துணைத் தேர்வெழுத ஆன்-லைன் வழியாக விண்ணப்பிப்பதற்கு **18.05.2026 (திங்கட்கிழமை) முதல் 30.05.2026 (சனிக்கிழமை) வரையிலான நாட்களில் (ஞாயிற்றுக்கிழமை மற்றும் பக்ரீத் பண்டிகை நாட்கள் நீங்கலாக) காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்** பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிக்கும் / தனித் தேர்வர்கள் சேவை மையங்களுக்கும் நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும் எனவும், மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் **01.006.2026 (திங்கட்கிழமை) மற்றும் 02.06.2026 (செவ்வாய்க்கிழமை)** ஆகிய நாட்களில் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**(அரசாணை (நிலை) எண்.63, பள்ளிக் கல்வித் (அ.தே.) துறை, நாள்.04.03.2024-ன்படி, 2025- 2026 ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் முழுமையாக அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று தேர்ச்சி பெறாத / வருகை புரியாத மாணவர்களுக்கு சிறப்பு அனுமதிக் கட்டணம் - ரூ.1000/- செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது)**

ஜூன்/ஜூலை 2026, மேல்நிலை துணைத் தேர்வெழுத விண்ணப்பிக்கும் தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவேற்றம் செய்வது தொடர்பாக சேவை மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் மேல்நிலை

-2-

இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் ஆகியவை இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

பள்ளி மாணவர்கள் 18.05.2026 முதல் வருகை புரிவார்கள். அவ்வாறு வருகை புரிவோருக்கு கீழ்க்கண்டவாறு ஆன்-லைன் மூலம் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய தங்களது ஆளுகைக்குட்பட்ட பள்ளிகள் / சேவை மையங்களின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. 18.05.2026 **காலை 11.00 மணி முதல்** பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிக்கும் / தனித்தேர்வர்கள் சேவை மையங்களுக்கும் வருகை புரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோரிடம், அவர்களது மார்ச்/ஏப்ரல் 2026 மேல்நிலை பொதுத்தேர்வின் நுழைவுச் சீட்டு (Hall Ticket) அல்லது மதிப்பெண் பட்டியலினை (Statement of Marks) ஆய்வு செய்து www.dgeapp.tnschools.gov.in என்ற website-ல் பள்ளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

3. தேர்வுக்கால அட்டவணைகள், மேல்நிலை தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் மற்றும் அதன் இணைப்புப் பட்டியல் ஆகியவற்றை சேவை மையங்களின் அறிவிப்பு பலகையில் ஒட்டவேண்டும்.

4. ஜுன்/ஜுலை 2026 துணைத் தேர்வுகளுக்கான விண்ணப்பங்களை பெற்று, பதிவேற்றம் (Uploading) செய்த பின்னர், **03.06.2026 அன்று** Report -ஐ Click செய்து தேர்வர் வகை வாரியான விவரங்களையும், கட்டணம் தொடர்பான விவரங்களையும் பதிவிறக்கம் (Downloading) செய்ய வேண்டும்.

5. பின்னர் அதனடிப்படையில் விண்ணப்பிக்க வருகை புரிந்த மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையினை, தேர்வு விண்ணப்பத் தொகை (தக்கல் கட்டணம் உட்பட) (Exam Fees + Others Fees) மற்றும், அரசாணை(2D) எண்.42, பள்ளிக் கல்வி(அ.தே)த் துறை, நாள்.11.04.2023-ன்படி, பெறப்பட்ட ஆன்-லைன் கட்டணத் தொகை ரூ. 70/-ல் (On- line Fees) சேவைமையங்களுக்கான சேவைக் கட்டணங்களுக்காகவும் / பராமரிப்பு செலவுகளுக்காகவும் ரூ.35/-ஐ வைத்துக்கொண்டு, மீதமுள்ள ரூ.35/-னையும் Online Payment செய்திட வேண்டும் அல்லது www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று

-3-

இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் கட்டணத்தினை செலுத்திட வேண்டும்.

| | |
|---|---|
| District | PAO (South) Chennai |
| Department receiving receipts | 04304 Directorate of Government Examinations |
| DDO Name | 41010118 Accounts Officer |
| கணக்குத் தலைப்பு | 0202 01 102 AA 22713-Examination Fees<br>0202 01 102 AA 22799- Others |

6. மேற்கண்டவாறு தேர்வர்களின் தேர்வுக் கட்டண தொகை மற்றும் ஆன்-லைன் கட்டணத்தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt மற்றும் தேர்விற்கு விண்ணப்பித்த மாணவர்களின் விண்ணப்பங்கள் (உரிய இணைப்புகளுடன்) ஆகியவற்றினை 04.06.2026-**க்குள்** சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் சார்ந்த மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் / சேவை மையங்களின் தலைமை ஆசிரியர் நேரில் ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்/-**

**இயக்குநர்**

**இணைப்பு**

1. சேவை மையங்களுக்கான அறிவுரைகள்
2. கருவூலம் மூலம் தேர்வுக் கட்டணம் செலுத்தும் வழிமுறைகள்
3. மேல்நிலை தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள்
4. +2 பழைய பாடத் திட்டத்திற்கு இணையான புதிய பாடத்திட்டத்திற்கான பாடங்கள்
5. சுய உறுதிமொழிப் படிவம்.

**<u>நகல்</u>**

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்ககம், சென்னை-6.
2. உறுப்பினர் செயலர், அரசு மாதிரிப் பள்ளிகள், சென்னை-6.
3. இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை-6.

4. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை-6.

5. மாவட்டக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்- தகவலுக்காக

6. மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்கள்-

(தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்)